(1) ஒழுங்குப் பிரச்னை.

(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி மறைவு குறித்து இரங்கல் குறிப்பு

திரு. எம். ஏ. லத்தீப் : தன்மான இயக்கத்தின் மிகப் பெரும் தலைவர், திரு. ஆசைத்தம்பி அவர்கள் மரணம் அடைந்து விட்டார்கள். அவர்களது மறைவு குறித்து இரங்கல் குறிப்பை சபையில் நிறைவேற்றியிருக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட தலைவர்களுக்கு சாதாரணமாக இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து தலைவர்களாவது தமது அனுதாபக் கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதித்திருக்க வேண்டும். அப்படி வரும் என்றுதான் நான் கூட ரயில் நிலையத்திலிருந்து குளிக்காமல் கூட நேராக அவைக்கு வந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய அவையின் வழக்கமும் மரபும், சிட்டிங் மெம்பர் மறைந்தால்தான் அவ்வாறு அனுமதிப்பதுண்டு, தீர்மானம் கொண்டு வருவது. இதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களிடமெல்லாம் கலந்து பேசிவிட்டுத்தான் எல்லோர்சார்பிலும் அனுதாபம் தெரிவிக்கும் முறையில் நான் ஆபிச்சுரிரெயரன்ஸ் கொண்டு வந்தேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த மன்றத்தில் உறுப்பின ராகவே இல்லாத வெளியிலுள்ள தலைவர்களுக்குக் கூட அத்தகைய தீர்மானம் கொண்டுவந்து எல்லாத் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விஷயம் முடிந்து விட்டது.

(4) உரிமைப் பிரச்னை

திருவாளர்கள் துரை முருகன், ரகுமான்கான், சுப்பு அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையில் 184–வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை கோவிந்தராசன், திரு. திருப்பூர் ஆர். மணிமாறன், சின்னசேலம் மா. சுப்பிரமணியன், கே. பண்ணை சேதுராம் ஆகியோர் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளனர். திரு. துரை கோவிந்தராசன் அப்பிரச்சினையை எழுப்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

1979 ஏப்ரல் 9]

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 184-ன் கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்க்கண்ட பிரச்சினையை அவை விவாதித்து தக்க நடவடிக்கை எடுக்க, இப்பிரச்னையை பேரவையில் எழுப்ப அனுமதி வேண்டுகிறேன்.

7-4-79 அன்று பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்து, கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப முயன்றார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்தபின், ஒழுங்குப் பிரச்சினையை எடுக்கலாம் என்று கூறினார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப ஆரம்பித்ததில் இருந்து பலவாறாகத் தரக் குறைவான சொற்களைப் பேசியும், சத்தம் போட்டும் ஆர்ப்பாட்டம் செய்தார். அவருக்கு முன்னால் இருந்த இருக்கையைத் தூக்கித் தூக்கிப் போட்டார். அதில் இருந்த ஒலிபெருக்கிக் கருவியை ஆட்டிப் பிடுங்கி எடுத்து வீச முயன்றார். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. இரகுமான்கான் அவர்கள் தனது இருக்கையில் இருந்து கொண்டு காலணிகளைக் கழட்டி அவைகளைப் பேரவைத் துணைத் தலைவரைப் பார்த்து வீசுவேன் என்றும் தாறுமாறாக ஏசினார். அதைக் கண்டு அவை அதிர்ச்சி அடைந்தது மட்டுமல்ல, பல உறுப்பினர்களுக்குப் பலாத்காரம் நேரிடும் என்ற எண்ணம் ஏற்பட்டது. மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும், குறிப்பாக, மாண்புமிகு திரு. நெல்லை ஜெபமணி (ஜனதா). மாண்புமிகு திரு. கே. கந்தசாமி (பார்வார்டு பிளாக்), மாண்புமிகு திரு. சந்திரன் (உழைப்பாளர் கட்சி) ஆகியோர் இப்போக்கை வலிமையாகக் கண்டித்தனர். அதைக்கண்டு பொறாது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், அவர்களையும் வசைச் சொற்களால் கேவலமாகவும், தரக் குறைவாகவும் ஏசினார்.

இந்தப் பேரவைக்கு இதுகாறும் இருந்த மரபும், கண்ணியமும் சீரழிக்கப்பட்டதாக மட்டும் அல்லாமல், இத்தகைய போக்கு தொடர்ந்து அனுமதிக்கப்பட்டால், அவையில் ஒழுங்காக விவாதத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் பல மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருதுகிறார்கள். கண்ணியத்தோடு கடமையாற்றும் உறுப்பினர்களுக்கு கடமையாற்ற இயலாதது மட்டுமல்ல. சுதந்திரமாகப் பேசவும் அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக சட்டப் பேரவை தனக்கு என உயர்ந்த மரபுகளையும், கண்ணியத்தையும் இதுவரை கடைப்பிடித்து வந்துள்ளது. தமிழக மக்களிடத்திலே மட்டுமல்லாமல்

இந்தியாவிலேயே ஒரு மரியாதையைப் பெற்று வருகிறது. ஆனால் இந்த நல்ல பெயருக்கு நிரந்தரக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் ஒரு சில உறுப்பினர்கள் நடந்துகொள்வது இப் பேரவையில் கண்ணியத்தைப் பாதிப்பது மட்டுமல்லாமல் தமிழகத்தின் பண்பாட்டினையே சீர்குலைக்கும் செய்கை யாகும்.

ஆகவே. இத்தகைய முக்கியமான பிரச்சினையை, இம்மன்றத் தின் கண்ணி த்தையும், உரிமையையும் பாதுகாக்கக் கூடிய பிரச்சினையை, அவை எடுத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் எழுப்ப பட்டுள்ள அவை உரிமை மீறல் பிரச்சினை, 7-4-1979 அன்று பேரவையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியது. இப் பிரச்சி னையில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்பது மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது தெளிவாகிறது.

எனவே, பேரவை விதி 188-ன் கீழ், இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்று தீர்ப்பளிக்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இந்த மன்றத்திலே இருக்கின்ற எந்த உறுப்பினரும் மகிழ்ச்சியைத் தெரிவிக்க மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை முன் மொழியட்டும், விவாதம் வருகிறபோது பேசலாம்.

5. அரசினர் தீர்மானம்.

திருவாளர்கள் துரை முருகன், இரகுமான்கான், சுப்பு ஆகியோர் மீது அவை உரிமை மீறல் குறித்து.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்று தாங்கள் தீர்ப்பு அளித்துள்ளதால், பேரவையின் 189-வது விதியின் கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" இப்பேரவையின் உறுப்பினர்களான திரு. துரை முருகன், திரு. இரகுமான்கான மற்றும் திரு. சுப்பு ஆகியோர் மீது எழுப்பப்பட்டுள்ள அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை இப்பேரவையே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் "